# ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ்

## வினா விடை நேரம்

## வினா எண் 315

*நம் அன்பிற்குரிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் ஒன்று பக்கம் 145-150 லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி*

தலைப்பு: முற்பிறவியிலிருந்து தொடர்ந்து வருகின்ற நடத்தை பண்புகளை மேம்படுத்தி கொள்வது பற்றி!

கேள்வி: ஸ்வாமி முந்தைய பிறவியின் குணாதிசியங்கள் இந்த பிறவியிலும் தொடர்ந்து வருவதாக சொல்லப்படுவது உண்மையா.
எப்படி அவ்வாறு நிகழ முடியும் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
நிச்சயமாக அப்படித் தான்.
கணக்கு புத்தகத்தில் ஒரு பக்கத்தின் முடிவில் வருகின்ற நிலுவை தொகையை அடுத்த பக்கத்துக்கு எடுத்து செல்வது போல் முற்பிறவியில் நீங்கள் செய்து பதியவைத்துக்கொண்ட பழக்கங்கள் இந்த பிறவியில் உங்களின் நடத்தையாகவே அமைந்து விடுகிறது.
ஒரு ஊதுவத்தியிலிருந்து வருகின்ற வாசனை அந்த அறை முழுவதும் பரவுவது போல் ஒரு மலரின் நறுமணம் எல்லா இடங்களிலும் பரவுவது போல் முற்பிறவியின் நடத்தை பண்புகள் இந்த பிறவியிலும் தொடர்கின்றன.

அடுத்த கேள்வி :
ஸ்வாமி பிறவி எடுத்து விட்ட மனித உடம்பு நாள்பட நாள்பட பலஹீனமடைந்து பின் அழிந்து விடுகிறது.
உடம்பே அழிந்து பட்ட பிறகு குணங்கள் மட்டும் எவ்வாறு அடுத்த பிறவியில் தொடர்ந்து வர முடியும்?

ஸ்வாமி யின் பதில்:
நிச்சயமாக வரத் தான் செய்யும்.
வாசனா மற்றும் ஸம்ஸ்காரா என்று அழைக்கப்படும் உங்கள் முற்பிறவியின் நடத்தை பண்புகள் இந்த பிறவியிலும் தொடர்ந்து வரத்தான் செய்யும்.
முற்பிறவியில் நல்ல சம்ஸ்காரத்தை பழகியவர்கள் இந்த பிறவியில் நல்ல எண்ணங்களுடன் நற்கருமங்களை செய்து கொண்டு நல்லோர் சேர்க்கையுடன் இறைவனை புகழுகின்ற பஜனை பாடல்களை பாடி கொண்டு இறைபக்தி உடையவர்களாக வாழ்வார்கள்.

மாறாக முற்பிறவியில் தீய ஸம்ஸ்காரங்களை பழகியவர்கள் இந்த பிறவியிலும் தீய எண்ணங்களுடன் தீய செயல்களில் ஈடுபட்டு பொய்மை பேசி வாழ்பவர்களாக இருப்பார்கள்.
பிறவி முடிந்ததும்
மனித உடல் அழிந்து விடுவது உண்மை தான்.
ஆனால் அந்த பிறவி முழுவதும் உங்கள் மனதில் பதிந்து விட்ட எண்ணங்களும் அதனால் செய்த செயல்களும்
அடுத்த பிறவியிலும் தொடர்ந்து வந்து உங்கள் நடத்தையை பாதிக்கின்றன.

உங்கள் கையில் அடிபட்டு விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்.அந்த இடத்திலே மருந்து தடவி பேண்டேஜ் போட்டுக்கொள்கிறீர்கள்.காயம் ஆறிய உடன் பேண்டேஜை கழட்டி விடுகிறீர்கள். ஆனால் அடிபட்ட இடத்திலே ஏற்பட்ட தழும்பு அப்படியே தங்கி விடுகிறது அல்லவா.அது போல் பிறவி முடிந்த உடன் உடல் அழிந்து விடலாம்.ஆனால் நீங்கள் வளர்த்து கொண்ட எண்ணங்களும் நடத்தைகளும் அப்படியே தழும்பு போல் தங்கிவிடுகின்றன.

அடுத்த கேள்வி: ஸ்வாமி உலக வாழ்க்கையில் மனிதன் தமோ குணம் ரஜோ குணம் மற்றும் சாத்வீக குணங்களால் வழி நடத்தப்படுவதாக கூறப்படுகிறது.
சாத்வீக குணம் கூட உலக இன்பங்களுடன் மனிதனை அடிமை படுத்தி விடுமா ஸ்வாமி?

ஸ்வாமியின் பதில்:
இந்த மூன்று குணங்கள் தான் மனிதனை உலக வாழ்க்கையில் பிணைக்கின்றன.
உங்கள் எண்ணம் சொல் செயல் அனைத்துமே இந்த மூன்று குணங்களால் ஆனவையே.
இவையே உங்கள் நடத்தையை தீர்மானிக்கின்றன.சாத்வீக குணமும் கூட மனிதனை உலகியலாக பிணைக்கத்தான் செய்கிறது.
உதாரணத்திற்கு உங்கள் கால்களை சங்கிலியால் கட்டி விடுவதாக வைத்து கொள்வோம்.
அது இரும்பு சங்கிலியாக இருந்தால் என்ன வெள்ளி சங்கிலியாக இருந்தால் என்ன அல்லது தங்கச் சங்கிலியாகத்தான் இருந்தால் என்ன.சங்கிலியின் மதிப்பு மாறலாமே தவிர கட்டு ஒன்று தானே.
இங்கே இரும்பு சங்கிலியை தமோ குணமாகவும் வெள்ளி சங்கிலியை ரஜோ குணமாகவும் சாத்வீக குணத்தை தங்க சங்கிலியாகவும் கொள்ளலாம்.
தெய்வீகம் மட்டுமே இந்த மூன்று குணங்களுக்கும் அப்பாற்பட்டு குணமற்றதாக இருக்கிறது.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி இந்த மூன்று குணங்களும் மாறுபடும் தன்மை உடையதா. சில சமயம் அலுவலகத்திலே சக ஊழியருடன் சச்சரவு ஏற்படுவதற்கு இவையே காரணமாகின்றன.எங்களின் இந்த தினசரி பிரச்சினைக்கு தீர்வு தாருங்கள் ஸ்வாமி.

ஸ்வாமி யின் பதில்:
உலகம் முழுவதுமே இந்த மூன்று குணங்களை கொண்டே இயங்குகின்றன

ஒவ்வொரு மனிதனுக்கும் இந்த மூன்று குணங்களும் ஒரு மின் விசிறியின் மூன்று இறக்கைகள் போல் இயங்குகின்றன

இந்த மூன்றில் எந்த ஒரு குணம் மேலோங்கி இருக்கிறதோ அதுவே அவனுடைய இயல்பையும்,

ஆளுமையையும் ஏன் விதியைகூட தீர்மானிக்கின்றது. ஒருவருக்கு சாத்வீக குணம் மேலோங்கி இருந்தால் அவர் இறைபக்தி உடையவராக இருப்பார்.

ரஜோ குணம் மேலோங்கி இருந்தால் அவர் உணர்ச்சி வசப்படுபவராகவும் எப்போதும் செயல்களில் ஈடுபட்டவராகவும் இருப்பார்.

தமோ குணம் மேலோங்கி இருந்தால் அவர் மந்த புத்தி உடையவராகவும் சுறு சுறுப்பு இல்லாதவராகவும் இருப்பார்.இவ்வாறாக ஒவ்வொருவரும் இந்த மூன்று குணங்களினாலேயே இயக்கப்படுகிறார்கள்.

உங்கள் கண் விழியில் நீங்கள் வெள்ளை சிவப்பு கறுப்பு என மூன்று நிறங்களை காண்கிறீர்கள் அல்லவா.அது மூன்று குணங்களையே குறிக்கின்றது.

காலையில் சூரிய உதயத்தை பாருங்கள்.அதிலே சிவப்பு வெள்ளை கறுப்பு என மூன்று நிறங்களை காண முடியும்.இவையும் மூன்று குணங்களின் வெளிப்பாடுதான்.

இங்கே ஒரு முக்கியமான விஷயத்தை நீங்கள் கவனிக்க வேண்டும்.

இந்த மூன்று குணங்களும் தன்னிச்சையாக இயங்க முடியாது

தெய்வீகமே இவைகளை இயக்குகிறது.

ஆனால் கடவுள் இந்த மூன்று குணங்களுக்கும் அப்பாற்பட்டவர். அதனால் தான் அவர் குணாதீதர் என போற்றபடுகிறார்.

இந்த மூன்று குணங்களையுமே ஒருவர் மாற்றி கொள்ள அதாவது மேம்படுத்திக் கொள்ள முடியும்.

உதாரணத்திற்கு தொடர்ந்து நற் செயல்களில் ஈடுபடுவதன் மூலமாக தமோ குணத்தை மேம்படுத்திக் கொள்ளலாம். சோம்பியிராமல்

செயல்களில் ஈடுபட்டிருப்பதன் மூலம் தமோ குணம் ரஜோ குணமாக மாறுகின்றது.

ரஜோ குணம் என்பது இரட்டை தன்மை கொண்டது.அது வெற்றியையும் கொடுக்கும். தோல்வியையும் கொடுக்கும்.

லாபத்தையும் கொடுக்கும் நஷ்டத்தையும் கொடுக்கும். புகழையும் கொடுக்கும். இகழ்ச்சியையும் கொடுக்கும்.

மனிதன் செயல் புரிந்துதான் ஆக வேண்டும்.இந்த உலகத்தில் செயலேதும் புரியாத மனிதர் என்று எவரும் கிடையாது.

நீங்கள் படுக்கையில் படுத்து உறங்கும் போது கூட உங்கள் இதயம் நரம்புமண்டலம் ரத்த ஓட்டம் சுவாசம் இவை எல்லாம் இயங்கி கொண்டு தான் இருக்கின்றன.

தன்னலமற்ற நற் செயல்களில் ஈடுபட்டு செயல்களின் பலன்களை இறைவனுக்கு ஒப்படைத்து விடும் போது உள்ளே உறையும் தெய்வீகத்தை உணர முடியும்.இந்த அனுபவஞானம் அதாவது நடைமுறை ஞானம் என்பது உங்களின் நேரடி அனுபவத்தின் மூலம் பெறபடுவதாகும்

இந்த நிலையில் ரஜோ குணமுடைய ஒருவர் சாத்வீக குணமுடையவராக மாறிவிடுகின்றார்.

எனவே செயல் புரிதல் என்பது முக்கியமானதாகும்.மனித சமுதாயம் செயல்களின் மூலமாகவே இயங்குகிறது.நீங்கள் பிறவி எடுத்ததே செயல் புரிவதற்காகத்தான்.ஜன்மாவும் கர்மாவும் ஒன்றோடொன்று பிணைந்தவையாகும்.
ஒவ்வொருவரும் தான் செய்கின்ற செயலை மரியாதையுடன் அணுக வேண்டும்.
எனவே தமோ குணம் நற்கருமங்களில் ஈடுபடுவதன் மூலமாக ரஜோ குணமாகவும் ரஜோ குணம் இறைவன் மீது பக்தி செலுத்துவதன் மூலம் சாத்வீக குணமாகவும் மேம்பட்டு இறுதியில் ஆத்ம ஞானம் கிட்டுகின்றது.
இதுவே ஆன்மீக சாதனை ஆகும்.
இவ்வாறாக ஆத்ம விசாரம் என்னும் தன்னிலை அறிதலை நோக்கி செல்லும்போது ஒருவர் தன்னுடைய இயல்பையும் நடத்தையையும் மேம்படுத்திக் கொள்ள முடியும்.
கீழ் நிலை மிருக குணங்களான தடுமாறும் புத்தி அதிக உறக்கம் இவை வரும்போது உங்களுக்கு நீங்களே நான் மிருகமல்ல நான் மனிதன் என்று பல முறை சொல்லி கொள்ளுங்கள்.அப்படிச் செய்யும் போது மிருக குணங்களை வெற்றி கொள்ள முடியும்.உங்களுடைய கடமைகளை மனமுவந்து செய்யுங்கள்.வெறும் பகட்டுக்காகவோ பெருமைக்காகவோ செய்யாதீர்கள்.நீங்கள் செய்கின்ற எந்த செயலையுமே மற்றவர்கள் பார்கிறார்களோ இல்லையோ கடவுள் பார்த்து கொண்டிருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
கடமைகளை அன்புடன் செய்யுங்கள்.

அன்புடன் செய்யபடும் கடமையே விரும்பத்தக்கது.
அன்பில்லாமல் கடமையை செய்வது விரும்பத்தக்கது அல்ல.
அனால் எந்த காரணமும் இன்றி அனைவரிடமும் அன்பு காட்டுவதே தெய்வீகமாகும்.
உங்களுடைய செயல்களின் பலன்களை நீங்கள் இறைவனுக்கு அர்பணித்து விடும் போது அதுவே இறைவழிபாடாக மாறிவிடுகின்றது.
உங்கள் அலுவலகத்தில் பணிபுரிகின்ற சக ஊழியருடன் கருத்து வேறுபாடு வரலாம்.உங்களால் மற்றவர்களுடன் அனுசரிக்க முடியாமல் போகலாம்.அதானால் சச்சரவுகள் ஏற்பட்டு மன அமைதியை இழக்கலாம்.
எனவே யாருடனும் நெருங்கிய உறவை வளர்த்துக் கொள்ளாதீர்கள்.
மேலாட்டமாகவே பழகி வாருங்கள்
ஹலோ- ஹலோ
நான் சௌக்கியம்.நீங்கள் நலமா என்றவாறு பணியாற்றிவிட்டு வணக்கம் என்று சொல்லி விட்டு வந்து விடுங்கள்.இதற்கு மேல் நெருங்கி பழக வேண்டாம்.
இன்றைக்கு உண்மையான சமுதாய சேவையாக எதுவுமே செய்யப்படுவதில்லை.எல்லாமே பகட்டுக்காகவே செய்ய படுகிறது.நீங்கள் செய்யும் எந்த செயலுமே மற்றவர்களின் பாராட்டுதலுக்காக அல்ல.அவைகள் உங்களின் திருப்திக்கும் மகிழ்ச்சிக்காகவும் செய்ய படுவதாக இருக்க வேண்டும்.
உங்கள் மனசாட்சிக்கு உகந்த செயல்களை செய்யுங்கள்.மற்றவர்கள் பாராட்ட வேண்டும் என்றோ புகழ வேண்டும் என்பதற்காகவோ செய்யாதீர்கள்.
உங்கள் உள்ளுணர்வே உங்களின் தெய்வமாகும்.

நன்னடத்தையே எப்போதும் முக்கிய மானதாகும்.அதிலிருந்து ஒரு போதும் தவறி விடக்கூடாது என்பதை நினைவில் வையுங்கள்.
ஒரு செயலின் வெற்றிக்கு தேவை அனைவரின் ஒத்துழைப்பேயாகும்.ஆனால் இன்றைக்கோ coperation அதாவது ஒற்றுமை இல்லாமல் வெறும் operation மட்டும் அதாவது வெறும் செயல் புரிதல் மட்டுமே நடக்கின்றது.

அனைவருக்கும் நன்றி வர இருக்கின்ற நாட்களில்
தொடர்ந்து நம் ஸ்வாமி யின் அருளுரைகளை கேட்டு அனுபவிப்போம்.
ஜெய் சாயிராம்.